[1975 நவம்பர் 12

*310 வினா—திரு. கி. செயராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் நகரத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் குடிநீர் விநியோகத் திட்டம் எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சேலம் நகரத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் குடிநீர் வினியோக வளர்ச்சித் திட்டம் மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டு முதல் நிலைப் பணியாகக் குழாய்கள் இரடிப்பு செய்யும் வேலை முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலையில், கூடுதல் தெளிநீர் தேக்கத் தொட்டி கட்டும் வேலையும் முடிவு பெற்றுள்ளது. சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் வேலையில் ஏறக்குறைய 75 சதவிகிதம் முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. மூன்றாம் நிலையாக நீர் ஏற்றும் இயந்திரங்கள் நிறுவும் வேலைக்கு நீர் ஏற்று இயந்திரங்கள் வாங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பெற்றுள்ளது. இயந்திரங்கள் வந்ததும், வேலை விரைவாக மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

திரு. அ. ஆறுமுகம்: தலைவரவர்களே, சேலம் நகரத்திற்குக் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது. இப்பொழுது காவிரியிலிருந்து சேலம் நகருக்குத் தண்ணீர் எடுத்து வரப்படுகிறது. அது போதுமானதாக இல்லை. அதை விரைவுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தத் திட்டமே இப்பொழுது முடியப் போகிறது. முடிந்தால் சேலத்தினுடைய தேவை நிறைவேறிவிடும்.

*311 வினா—திரு. வ. முத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம், சங்ககிரி நகரப் பகுதிக்கு காவிரியிலிருந்து குடிநீர் வழங்கப்படுவதற்கான திட்டம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

1975 நவம்பர் 12]

திரு. வ. முத்து: தலைவரவர்களே, சங்ககிரி நகரப் பஞ்சாயத்து மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிறது. அதற்கு அருகில் உள்ள சிமெண்ட் ஃபேக்டரிக்குக் காவிரி நீர் வருகிறது. அந்தப் பகுதிக்கு அங்கேயிருந்து குடிதண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, வறண்ட பகுதி என்ற அந்த அடிப்படையில் கிடைக்க வேண்டிய தண்ணீருக்கு ஏற்கனவே வழி செய்யப்பட்டு தினம் 3,000 காலன் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதும் ஆலோசிக்கப்பட்டது; 18 கிலோமீட்டர் தொலைவிலிருந்து வரவேண்டும். அதற்கு 36 இலட்சம் ரூபாய் நிர்மாணச் செலவு, 1¼ இலட்சம் ரூபாய் ஆண்டு பராமரிப்புச் செலவு ஆகும். இந்தத் தொகையை ஈடுகட்டுவதற்கான வாய்ப்பு சங்ககிரி பேரூராட்சி மன்றத்திற்கு இல்லை. ஆகவே, சிறிய அளவில் போர் பம்புகள் மூலம் பக்கத்திலுள்ள குவாரி அடிவாரத்திலே கிடைக்கும் தண்ணீரை மேலே கொண்டு வருவதன் மூலம் இந்த நகரின் தேவைக்கு இலட்ச ரூபாய் செலவில் ஏற்பாடாகி இருக்கிறது. தண்ணீர் கிடைக்கிறது.

* 312. *Q.*—THIRU A. PARANTHAMAN: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) the number of schemes that were taken up and sent to the Central Government for approval, under the Accelerated Rural Water Supply Scheme in Chingleput district during the period 1973–74; and

(*b*) the number of schemes approved by the Central Government during this period?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இதுகாறும் செங்கற்பட்டு மாவட்டத்தில் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் 354 திட்டங்கள் மத்திய அரசிற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

(இ) அதனுள் 1972-73-ல் மத்திய அரசு 40 திட்டங்களுக்கு (சோழவரம், கும்முடிப்பூண்டி, மீஞ்சூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில்) அனுமதி அளித்தது. அவ்விதம் அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்கள் யாவும் 1972-73-ல் மட்டுமன்றி தொடர்ந்து, 1973-74, 1974-75 முதலிய ஆண்டுகளிலும் தொடங்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன.